வளன்ஆயம்
நொடிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# நாட்டார் வழக்காற்றில் சிறுதெய்வ வழிபாட்டுக் கூறுகள்

**க.சுபலா**, முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை.
**முனைவர் ம.கீதா,** ஆய்வு நெறியாளர், உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை.
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்
கோயம்புத்தூர் - 641043.
மின்னஞ்சல் - subalakathirvel@gmail.com/mgeethaphd@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

வழிபாடுகள் அனைத்திற்கும் ஆதி என்று குறிக்கப்படுவது இயற்கை வழிபாடாகும். பரிணாம வளர்ச்சியை அடைந்த கடைசி உயிரினமாக மனிதன் இடம்பெறுகிறான். மனிதன் தோன்றிய நாள் முதல் அவன் வாழ்வதற்கான அடிப்படைத் தேவைகளாக உணவு, உடை, உறையுள் என்று வகுத்துக் கொண்டு இம்மூன்றையும், இயற்கையிலிருந்து பெற்றே தன் வாழ்வினைத் தொடங்கினான். தான் வாழும் வாழிடச் சூழலில் தனக்கு மீறிய ஒரு சக்தியின் வெளிப்பாடாகவே வழிபாட்டினைத் தொடங்கினான். இயல்பாக அச்சம் ஒரு மிக முக்கியக்காரணம் என்றாலும் அது இயற்கை வழிபாட்டின் முக்கியக் கூறாக விளங்கியது. இயற்கை வழிபாட்டின் வளர்ச்சியே சிறுதெய்வ வழிபாடாகும். இவற்றுள், தமிழகத்தில் குகை ஓவியங்களில் பல்வேறு வழிபாட்டு கூறுகள் காணப்படுவதாக அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். அவ்வகையில் தொல்பழங்கால முறைகளே பிற்காலத்தில் சமயங்களாக வளர்ந்துள்ளதைக் காணமுடிகின்றது. இவ்வுலகில் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளுக்கும் நம் கண்ணில் புலப்படாத நம்மை மீறிய ஒரு சக்தி என்றே கருதப்படுகின்றது. அவ்வகையில், இயற்கைமேல் வைக்கப்படும் நம்பிக்கையே வழிபாட்டின் முதற்கட்டமாகும். சமூகத்தில் தனிமனித ஒழுக்கம், கட்டுப்பாடு, நன்னெறியில் வாழ்தல் போன்றவை வழிபாட்டினை அடிப்படையாகக் கொண்டு இன்றளவும் நிகழ்கின்றது. இவ்வழிபாட்டின் வழி வளமிக்க சமுதாயம் ஒன்று உருவாகி வருகின்றது. மனிதனை நன்னெறிப்படுத்தி, வளமாக வாழ்வதற்கான வித்தாக

அமைவது வழிபாடாகும். மனித வாழ்க்கையில் வழிபாடு இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றது. சிறுதெய்வ வழிபாடு வாழ்வின் ஊன்றுகோல் ஆகும். இதனை ஆராயும் வகையில் இவ்வாய்வுக்கட்டுரை அமைகின்றது.

கலைச்சொற்கள்

மரபு - இயற்கை - வழிபாடு - நம்பிக்கை - ஆற்றல் - பண்பாடு - வரலாறு

முன்னுரை

பண்பாட்டு நிலையில் உயர்ந்து விளங்கும் மக்களிடையே மரபான சிந்தனைகள், நடைமுறைகள் ஆகியன எஞ்சி நிற்கும்போது அது நாட்டார் வழக்காறாகத் தோற்றம் பெறுகிறது. ஆதி மனிதன் இயற்கையின் ஆற்றலைக் கண்டு அஞ்சினான், அதன் சீற்றத்திற்கு ஆளாகாமல் இருப்பதற்காகவே இயற்கை வழிபாட்டினைத் தோற்றம் பெறச் செய்தான். அன்று முதல் இன்று வரை மனித வாழ்க்கையில் வழிபாடு இன்றியமையாத இடத்தைப் பெற்று வருகின்றது. இயற்கைக்கு ஒரு உருவம் கொடுத்து வழிபடுவதன் மூலம் மக்களிடையே உருவ வழிபாடு தோற்றம் பெற்றுள்ளது. பண்டையக் காலத்தில் தொடங்கிய வழிபாடுகள் இன்று வரை தமிழர்களின் மரபுகளில் வேரூன்றி வந்துள்ளதைக் காணமுடிகின்றது. பழங்காலத்தில் இயற்கையோடு இயைந்து வாழ்க்கையை வாழ்ந்த மனிதன் இயற்கையை வழிபாட்டு மரபாகக் கண்டுணர்ந்து, அதன்மூலம் சிறுதெய்வ வழிபாட்டினை மேற்கொண்டான். அந்தவகையில், சிறுதெய்வ வழிபாட்டில் இடம்பெறும் நாட்டார் மக்களின் வழிபாட்டுக் கூறுகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

தொடக்க கால வழிபாடு

பழங்காலந்தொட்டு மனிதன் இயற்கையோடு இயைந்த வாழ்வை நடத்தினான். காலமாற்றத்தால் இந்த இயற்கை வழிபாடு பல்வேறு பரிணாமங்களைப் பெற்று வந்திருக்கிறது. நம்பிக்கையின் அடிப்படையில் வழிபாடு தோற்றம் பெற்று வளர்ந்து வந்துள்ளது. இயற்கை வழிபாடுகளிலிருந்து தொடங்கிய சிறுதெய்வ வழிபாடு இறைவழிபாடு, தனிமனித வழிபாடு என்று இருகூறாக நிலைத்து வருகின்றது. தொடக்க கால வழிபாடு நான்கு வகையாகப் பிரிக்கலாம். அவை, இயற்கை வழிபாடு, மரவழிபாடு, போலி உருவ வழிபாடு, முன்னோர் வழிபாடு என்பதாகும். ஆதியிலிருந்து மனிதன் இயற்கையை வழிபட்டதன் மூலம் இயற்கை வழிபாடு அனைத்திற்கும்

முதன்மையாக அமைகின்றது. பழந்தமிழரின் இயற்கை வழிபாட்டினைத் தொல்காப்பியம்,

“கொடிநிலை, கந்தழி, வள்ளி, யென்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றுங்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே”1 (தொல்.பொருள்.1037)

என்ற நூற்பா வழி, கொடிநிலை, கந்தழி, வள்ளி என்னும் மூன்று வாழ்த்து நிலைகள் சொல்லப்படுகின்றன. இயற்கையோடு இயைந்து வாழ்வு நடத்திய தமிழ்மக்கள் இயற்கை வழிபாடு செய்தார்கள் என்பதற்கு அடிப்படையாக விளங்கும் இம்மூன்றும், கொடிநிலை, கால மாற்றத்தால் பரிணாம வளர்ச்சி பெற்று, திருக்கோயில் கொடிமரமாக மாற்றம் பெற்று ஏற்றப்படும் கொடியாகவும் பின்பு பலிக்கல்லாகவும் வள்ளி, பலிக்கல்லில் படைக்கப்படும் பலியாக மாற்றம் பெற்றன என்னும் முறையில் இயற்கை வழிபாடாகிய மரவழிபாட்டுடன் இம்மூன்றையும் தொடர்புப்படுத்தும் நிலையைக் காணமுடிகின்றது. பண்டையக் கால வாழ்வியல் சூழல், வளர்ச்சி பெற்றதற்கேற்ப வழிபாடு செய்யும் முறைகளும் பல பரிணாமங்களை அடைந்துள்ளது.

நாட்டுப்புறச் சமயம்

சமயம் என்பது ஒரு முழுமையான ஒழுங்கமைப்பு பற்றியும் இனக்குழு பற்றியும் பேசுவதாகும். நம்பிக்கையும் பண்புகளும் அடிப்படைச் சடங்குகளாக மாறி அதன் வளர்ச்சியை ஒழுங்கமைப்பில் இணைப்பதே சமயம் எனப்படும். “சடங்குகள், நம்பிக்கைகள் ஆகியவற்றின் கலவையே சமூகத்தின் சமயமாகும். இந்தச் சடங்குகள் நம்பிக்கைகள் ஆகியவற்றின் உறுப்புக்கூறுகள் வழிப்பாட்டு நிறுவனங்கள் என்ற தளத்தில் பிரிக்க முடியாதவாறு இணைக்கப்பட்டிருக்கும்.”2 என்று சமயத்தை வரையறை செய்கிறார்.

சிறுதெய்வம் பெருந்தெய்வம்

சிறுதெய்வம் குறித்தான செய்திகள் பெருந்தெய்வமான, சிவபெருமானை பாடுபொருளாகக் கொண்ட திருமுறைகளில் அப்பர் பெருமான் குறிப்பிட்டுள்ளார். பெருந்தெய்வ வழிபாடு இச்சமூகத்தில் முன்பே இருந்தது என்பதை சங்க இலக்கிய கடவுள்வாழ்த்துப் பாடல்கள் எடுத்துரைக்கின்றது. காவிரிப்பூம்பட்டினத்து காரிக்கண்ணனார் என்னும் புலவர்,

“இருபெருந் தெய்வமும் உடனின் றாங்கு”3 (புறநானூறு.58)

என்ற அடியில் பலராமனையும், திருமாலையும் இருபெரும் அரசர்களுடன் ஒப்பிடுகிறார். சிறுதெய்வம் பெருந்தெய்வம் என்பது அடிப்படையில் மக்கள் தங்களுக்கு மீறிய சக்தியினை வழிபட்டுள்ளார்கள் என்பதனையும் இவற்றுள், சமூகச் சூழலில் மேல்தள மக்கள் வழிபடுவது பெருந்தெய்வத்தையும் அடித்தள மக்கள் வழிபடுவது சிறுதெய்வம் என்பதனையும் காணமுடிகின்றது. இவ்வாறான வேறுபாடுகள் அக்காலத்தில் இருந்திருப்பதாகவும் தெரிய வருகின்றது.

வேத ஆகமங்களோடு தொடர்புடையது பெருந்தெயவங்கள் என்று வரையறுக்கலாம். இவையனைத்தும் எழுதப்பட்ட புராணமரபுக் கதைகளைக் கொண்டிருப்பதாகும். பெருந்தெய்வங்கள் அனைத்தும் வைதீக நெறிக்குட்பட்டதாகும். வைதீக நெறிக்கு உட்படாத தெய்வங்களை நாட்டுப்புறத் தெய்வங்கள் அதாவது சிறுதெய்வங்கள் என்று கூறப்படுகிறது. அறுவகைச் சமயங்களில் பெரும்பாலான பெருந்தெய்வங்கள் சைவம், வைணவம் என்று இருவகையான சமயத்திற்குள் அடங்கிவிடும். ஏனைய தெய்வங்கள் ‘சிறுதெய்வங்கள்’ என்று அழைக்கப்படுகின்றது. “சிறுதெய்வங்களாவன இன்றுவரை இல்லுறை தெய்வங்களையும், மூதாதையர்கள் தம்;வீட்டில் இறந்த பிள்ளைத்தாச்சிகளையும் வழிபட்டு வந்தனர்.”4 என்கிறது நாட்டார் வழக்காற்றியல். வைதீக நெறியில் வழிபடும் தெய்வங்கள் தெய்வங்களின் உருவம், வடிவம், தோற்ற அமைப்பு, பூஜை என அனைத்திற்கும் எழுத்து மரபு மற்றும் ஆகமமுறைகள் உண்டு. ஆனால் மாறாக சிறுதெய்வத்திற்கான உருவம் இவ்வாறாகதான் இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஆகம நெறிப்படி கட்டப்பெறும் கோயில்கள் சிறுதெய்வங்களுக்கு இல்லை காலப்போக்கில் இதில் சில மாற்றங்களும் ஏற்பட்டு வருவதைக் காணமுடிகின்றது.

சிறு தெய்வ வழிபாடு

தமிழகத்தில் பெரும்பான்மை மக்களால் வழிபடப்பட்டு வரும் நாட்டுப்புறத் தெய்வ வழிபாட்டு மரபைத் தமிழரின் வழிபாட்டு மரபு என்று கூறுவது பொருத்தமாகும். நாட்டுப்புறத் தெய்வ வழிபாடுகள்தான் அனைத்து வழிபாட்டு மரபுகளுக்கும் வித்தாக விளங்குபவையாகும். தமிழகத்தில் பல்லாயிரக் கணக்கான நாட்டுப்புறத் தெய்வங்கள் வழிபடப்படுகின்றன. சிறுதெய்வ வழிபாடு, வீட்டுத்தெய்வ வழிபாடு, குலதெய்வ வழிபாடு, இனதெய்வ வழிபாடு, ஊர்த்தெய்வ வழிபாடு மற்றும் வெகுசனத் தெய்வ வழிபாடு என்று பிரிக்கப்படுகின்றது. அவற்றுள், ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒரு சில

தெய்வங்கள் மிகுதியான இடங்களில் வழிபடப்படுகின்றன. இயற்கையில் மனிதனுக்கு ஏதோ ஒன்றின் மீது அதிக நம்பிக்கை ஏற்படுவதன் மூலம் மந்திரங்கள், சடங்குகள், வழிபாடுகள் தோன்றுகின்றன. இவையனைத்தும் தம்முள் ஒன்றிணைந்து உருவம் பெற்று வழிபாடாகவும், வழிபாட்டு மரபாகவும் மாறுவதன் மூலம் நாட்டுப்புறத் தெய்வங்கள் (சிறுதெய்வங்கள்) தோற்றம் பெற்றுள்ளதை அறியமுடிகின்றது. சிறுதெய்வ வழிபாட்டிற்கு முறையான கட்டமைப்பு இல்லாததால் அவை இயற்கை வழிபாட்டு சடங்குகளின் வளர்ச்சி நிலையே என்று கருதப்படுகின்றது. உலகில் மிகவும் பழமையானதாக கருதப்படுவது இயற்கை வழிபாடு ஆகும். இயற்கை வழிபாட்டிற்கு அடுத்தபடியாக கூறப்படுவது சிறுதெய்வ வழிபாடு ஆகும்.

ஏழாம் நூற்றாண்டில் சிறுதெய்வ வழிபாட்டினை,

“சென்று நாம் சிறுதெய்வம் சேர்வோம் அல்லோம்”5 (6.98)

என்று திருநாவுக்கரசர் தேவாரத்தில் குறிப்பிடுவதைக் காணமுடிகின்றது. தமிழகத்தில் பல்லாயிரக்கணக்கான சிறு தெய்வங்கள் வழிபடபட்டாலும் சில சிறுதெய்வங்களே மிகுதியான இடங்களில் வழிபாடு நடத்தப்படுகின்றன. “குறிப்பிட்ட நாட்டுப்புறத் தெய்வ வழிபாடு செல்வந்தர்களின் ஆதரவுடன் மக்கள் ஆதரவு பெற்று வளர்ச்சி அடையும்போது அத்தெய்வம் வைதீகத்தெய்வங்களோடு தொடர்புப்படுத்தப்பட்டு காலப்போக்கில் அவற்றோடு ஐக்கியப்பட்டுவிடுவதையும் காணமுடிகிறது. இன்று வழிபடப்படும் வைதீகத் தெய்வங்கள் அனைத்தும் இவ்வாறு தோன்றி வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.”6 என்று குறிப்பிடுகிறார்.

புராணக் கதைகள்

புராணக் கதைகள் என்பது நாட்டார் தெய்வம் எவ்வாறு தோற்றம் பெற்றது மற்றும் ஏன் வழிபடும் இடத்திற்கு அத்தெய்வம் வளர்ச்சி பெற்றது என்பதை வாய்மொழி மரபில் அத்தெய்வத்தை வழிபடுவோர் கூறும் செய்திகளின் கதை வடிவமாகும். இதில் புராண மரபின் தாக்கம் குறைந்த அளவிலே காணப்படுவதால் செய்திகள் முக்கியத்துவம் பெறுகிறது. சில இடங்களில் இந்த நாட்டார் தெய்வங்கள் தோற்றம் பெற்று வளர்ச்சி அடைந்ததை பற்றிய ‘வில்லுப்பாட்டுகள்’ காணப்படுகிறது. சிறுதெய்வங்களின் வரலாற்றினை அறிவதற்கும், அந்த மக்களின் வரலாற்றினை அறிவதற்கும் இந்த புராணக் கதைகள் முக்கிய இடம்பெறுவதைக் காணலாம்.

வழிபாட்டிடங்கள்

நாட்டுப்புற மக்கள் தங்களின் வசதிக்கேற்ப எந்தவித ஆகம முறைப்படியும் இல்லாமல் தன் தெய்வத்திற்கான வழிபாட்டுப் பீடத்தினை தாமே அமைப்பர். பெரும்பாலும், ஊரின் மத்தியிலும் காவல் தெய்வமாக இருக்கும் பட்சத்தில் ஊரின் எல்லைப் புறங்களிலும், ஒரு ஊரின் தொடக்கத்திலும் அமைப்பது உண்டு. சிறுதெய்வ கோயில்கள் ஒரு இனக்குழு மக்களால் கட்டமைக்கப்படும். ஒரு குடும்பம், ஒரே சாதியினர், ஒரே ஊர்கார்களால் வழிபடப்பட்டு வருவதால் அவர்கள் கூடவே புலம் பெயர்தலும் உண்டு. ஒரே ஊரில், ஒரே தெய்வம் வெவ்வேறு சாதியினரால் வழிபடப்படுகிறது. வழிபாட்டிடங்கள் பொதுவாக நாட்டுப்புற மக்கள் தாங்கள் வாழிடப் பகுதிகளில் தங்கள் சொந்த ஊரிலிருந்து பிடிமண் எடுத்து நிறுவுதல், குறி சொல்லுதல், புதிதாக பீடம் அமைத்து கோவில் எழுப்புதல் மற்றும் நோயினால் விபத்தினால் ஏற்படும் துன்பங்களிலிருந்து தற்காத்துக் கொள்ள அசரீரியின் வாக்கிற்கிணங்க அமைத்துக் கொள்ளும் முறைகளும் உண்டு. ஆயுதங்கள், மரத்தடிகள், வெற்றிடங்கள், பீடங்கள், கற்கள், மரங்கள், ஓவியங்கள் நீர்நிலைகள், போர்க்கருவிகள், கருங்கற்கள், முதலியனவே பழமையான வழிபாட்டிடங்களாக இருந்து வந்துள்ளதைக் காணமுடிகின்றது.

வழிபடுவோர்

நாட்டுப்புறத் தெய்வங்களை வழிபடுவோர் வைதீக நெறியினைச் சாராத மக்களாக இருப்பர். அவரவரின் சாதிக்கேற்ப பூசாரிகள் மற்றும் பண்டாரங்கள் என்பவர்கள் இருப்பர். நாட்டுப்புறத் தெய்வங்கள் மனிதர்களின் மேல் இறங்கி மக்களோடு தொடர்பு கொள்ளும். நோய், பயம், தம்மைக் காக்கும் இறைவன் என்ற அடிப்படை நம்பிக்கை உள்ளவர்கள் அனைவரும் சிறுதெய்வங்களை வழிபட்டனர் என்பதனை அறியமுடிகின்றது.

சடங்கியல் முறைகள்

சிறுதெய்வ வழிபாட்டிற்கான சடங்குகள் ஒரு வரலாற்று பிணைப்பினை கொண்டுள்ளதாகும். இதனை கதைப்பாடல்களின் வழி அறியலாம். திரௌபதி அம்மன் வழிபாட்டில் மகாபாரத கதை நிகழ்த்துதல் இன்றும் வடமாவட்டங்களில் நடைபெறுகின்றது. அரிச்சந்திரன் நாடகம், மாசாணியம்மன் திருவிழா, அண்ணன்மார் சுவாமிகள் போன்றவை இதில் அடங்கும். இந்தக் கதை நிகழ்ச்சிகள் நாட்டார் வழிபாட்டின் முக்கியக் கூறாகக் கருதப்படுகின்றது.

சிறுதெய்வ கோவில்களின் காலம்

மக்கள் தம்மைப் பாதுகாக்க வேண்டிய தெய்வத்தினை வழிபட்டனர் என்பதை,

“வழிபட்ட தெய்வம் தான் வலினைச் சார்ந்தார்கண்

கழியும் நோய் கைம்மிகு அணங்காகியது போலப்”7 (நெய்தற் கலி.பா.15)

என்ற அடிகளின் வழி அறியமுடிகின்றது. சிறுதெய்வ வழிபாட்டினைப் பற்றிய கல்வெட்டுச் செய்திகள், செப்பேடுகள், ஆவணங்கள் கிடைக்கவில்லை. ஒரு ஊர் மக்களால் தொடர்ந்து வழிபாடு செய்த பின் கோவில்கள் அமைத்திருக்கலாம். காலப்போக்கில் சில கோவில்கள் மற்றும் வரலாறுகள் மறந்தும் மறைக்கப்பட்டும் இருக்கலாம். தெய்வத்திற்கான பீடங்கள் அமைத்து வழிபாடு செய்திருக்கலாம் தெய்வங்களின் வளர்ச்சிக்கேற்ப கோயில்களின் உரிமைகளும் மாறுபடுவதைக் காணமுடிகின்றது.

சிறுதெய்வ வழிபாட்டிற்கான கூறுகள்

தமிழகம் முழுவதும் வாழும் மக்கள் ஒரே பண்பாட்டைச் சார்ந்தவர்களில்லை. அவர்களின், தாய்மொழி தமிழாக இருப்பினும் மதம், சமயம், இனம், சாதி போன்ற பல்வேறு காரணிகளால் வேறுபட்டு நிற்கின்றனர். இத்தகைய வேறுபாட்டில் ஒரு குழுவைச் சார்ந்த மக்கள் ஒரே தெய்வத்தை மட்டும் வழிபடுவதில்லை. ஒரே தெய்வம் எனினும் மக்கள் தங்கள் நிலம், தொழில், காலம், இனக்குழு மற்றும் அவரவரின் விருப்பத்திற்கு ஏற்ப முறையாக வழிபாடு நடத்தி வருகிறார்கள். முறையாக வழிபாடு நடத்துவது என்பது ஆரம்பக்காலந் தொட்டு மரபாக நடைபெறும் முறையாகும். சில சிறுதெய்வங்கள் சில இடங்களில் சிறப்பாக வழிபடப்படும். இசக்கியம்மனும், சுடலைமாடனும் தென் தமிழகத்தில் வழிபடப்படுவன. அய்யனார் மற்றும் கருப்புசாமி மதுரையில் சிறப்பிடம் பெறுகின்றன. சிறுதெய்வங்களுக்கு நடைபெறும் வழிபாடு என்பது தொடக்கத்தில் இருந்து ஒரே இனக்குழு மக்களினால் ஒரே வழிபாட்டு முறையில், ஒரே சூழலில் நடத்தப்படுவதில்லை. இதில் இடங்களும் பொருந்துவதைக் காணலாம். பெரும்பாலான தெய்வங்களுக்கு பல்வேறு இடங்களில் ஒரே மாதிரியான பண்பு கூட இருப்பதில்லை. தெய்வ வடிவங்கள், வழிபாட்டு முறைகள், தெய்வப்பாத்திரங்கள், நம்பிக்கைகள் மற்றும் அதற்கானப் புராணக் கதைகள் கூட வேறுபடலாம். காலச்சூழலுக்கு ஏற்ப அனைத்தும் மாற்றம் பெறுகின்றது. பண்பாட்டில் ஒரே நிலையான தன்மை இருப்பதால் ஒரு தெய்வம், பல தெய்வங்களாக

பிளவுப்படுதலும், பல தெய்வங்கள் ஒன்றாக மாறுவதும் உண்டு. இவை காலப்போக்கில் மறைந்தும் போகின்றன. நாட்டார் வழிபாட்டில் வழிபாடு தோன்றுவது பற்றி, “வழிபாடு செய்யும் ஒவ்வொரு குழுவும் வெவ்வேறுபட்ட தனித்தனி நடத்தைகளையும், நம்பிக்கைகளையும், பூசாரிகளையும் கொண்டிருக்கும். இயற்கையறிந்த சக்தியின் மீது நம்பிக்கையும் பக்தியும் கொண்டு புனிதமான நடத்தைகளில் மக்கள் குழுவினர் ஈடுபடும்போதுதான் வழிபாடு தோன்றும்”8 என்று குறிப்பிடுகின்றார். ஒரு வகையில் நம்பிக்கைகளின் அடிப்படையில் மக்களால் தொடர்ந்து கடைபிடிக்கப்படும் வழிபாடுகள் காலப்போக்கில் முக்கியச் செயல்பாடாக மாறுகிறது. மனிதன் தோன்றிய அன்றுதான் இவ்வுலகில் அனைத்தும் தோற்றம் பெற்றுள்ளது. தொன்மையான புராணக் காலத்திலிருந்து இந்தியாவில் உள்ள கடவுள்களை அல்லது வழிபாட்டு மரபினை இரண்டு வகையாகப் பிரித்து ஆராய்கிறார்கள். அவற்றுள் முதலாவது, பெரும் மரபு (Great Tradition) வைதீக மரபினை சார்ந்த பெருந்தெய்வங்கள். மற்றொன்று சிறுதெய்வ மரபு (Little Tradition) சிறுதெய்வங்கள், கிராம தெய்வங்கள் அல்லது நாட்டுப்புறத் தெய்வங்கள் என்கின்றனர். நாட்டுப்புறத் தெய்வங்களை அடையாளங்காண்பதற்கு சிறுதெய்வங்களை வழிபடுவோர், சாமியாடிகள், செயல்பாடுகள், பலி, நம்பிக்கைகள், கோயில்கள், வழிபடுவோரின் இருப்பிடம், கதைப்பாடல்கள் போன்றவற்றைக் காண முடிகின்றது.

தொகுப்புரை

இயற்கையின் பெரிய ஆற்றல்கள் சில பொருள்களில் உறைந்துள்ளன என்று கருதி அதனை மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்டதாக கருதினர். வழிபாட்டு முறைகள்தான் ஒரு நாட்டின் பண்பாட்டின் வரலாற்றோடு முக்கிய தொடர்புடையதாகும். தமிழகக் கிராமப்புற பகுதியில் அதிகளவில் நாட்டார் தெய்வங்கள் வழிபடப்படுகிறது. இவை பெரும்பாலும் இந்துசமய மதத்தோடு ஒருங்கிணைந்து காணப்படுகிறது. பெருந்தெய்வங்களுக்கான வைதீக நெறியில் இருக்கும் தெய்வங்கள் நற்பண்புகள் மிக்கதாகவும் தீமை செய்ய இயலாததாகவும் கூறப்படுகிறது. மாறாக, நாட்டுப்புறத் தெய்வங்களின் மேல் இயல்பிலே ஒரு இருண்மைத் தன்மை சூழ்ந்து இருப்பதாகவே காட்சிப்படுத்தப்படுகிறது. நாட்டுப்புறத் தெய்வங்கள் அதன் வரலாற்றோடு அத்தெய்வங்களின் ஆற்றல், இயல்புகள், உருவங்கள், வழிபாட்டு முறைகள்,

வழிபடுவோர், வழிபடு பொருட்கள், வழிபாட்டிடங்கள் என அனைத்தையும் கதைப்பாடல்கள் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது.

முடிவுரை

இவ்வுலகில் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளுக்கும் நம் கண்ணில் புலப்படாத மீறிய ஒரு சக்தி என்றே கருதப்படுகிறது. அவ்வகையில், இறை மேல் வைக்கப்படும் நம்பிக்கையே வழிபாட்டின் முதற்கட்டமாகும். சமூகத்தில் தனிமனித ஒழுக்கம், கட்டுப்பாடு, நன்னெறியில் வாழ்தல் போன்றவை வழிபாட்டினை அடிப்படையாகக் கொண்டு இன்றளவும் நிகழ்ந்து வருகின்றது. இவ்வழிபாட்டின் வழி வளமிக்க சமுதாயம் உருவாக முடியும். சிறுதெய்வ வழிபாடானது இயற்கையிலிருந்து தொடங்கி இயற்கையை மையமிட்டேதான் நகர்ந்து கொண்டிருப்பதைக் காணமுடிகின்றது. தொல்பழங்கால முறைகளே சமயங்களாக வளர்ந்துள்ள நிலையில் தமிழகத்தில் காணப்பெறும் குகை ஓவியங்களில் பல்வேறு வழிபாட்டுக்கூறுகள் காணப்படுவதாக அறிஞர்கள் கூறுகின்றனர். நாட்டுப்புற மக்களின் நம்பிக்கைகள், மரபுகள், பண்பாடுகள் மற்றும் எண்ணங்களை அடிப்படையாகக் கொண்டு அதன் வழிபாட்டு முறைகளையும் தொன்மையையும் பிரதிபலித்து நிற்பதைக் காணலாம். இம்மக்களின் வாழ்வில் ஏற்படும் இன்பத்துன்பங்களுக்கும் நோய்நொடிகளுக்கும் அத்தெய்வங்களையே வணங்கும் முறையை இன்றும் காணமுடிகின்றது. இம்மக்கள் உள்ளவரை இந்த வழிபாடு தொன்மை மாறாமல் இருக்கும் என்றும் உயிரினங்களின் பரிணாம வளர்ச்சியில் இறுதியாக தோன்றிய மனிதன் இயற்கையிலிருந்து வாழ்விற்கு அடிப்படைத் தேவையான வழிபாட்டைத் தொடங்கினான் என்பதையும் அறிந்துகொள்ள முடிகின்றது.

சான்றெண் விளக்கம்

1. தொல்காப்பியம் பொருளதிகாரம், நூற்பா.1037
2. நாட்டார் வழக்காற்றியல், ப.398
3. புறநானூறு, பா.58
4. நாட்டார் வழக்காற்றியல், ப.401
5. திருநாவுக்கரசர் தேவாரம் ஆறாம் திருமுறை, பா.98
6. தமிழர் வழிபாட்டு மரபுகள் (நாட்டுப்புறத் தெய்வ வழிபாட்டு ஆய்வு), ப.34

7. கலித்தொகை, நெய்தற் கலி.பா.15

8. நாட்டார் வழக்காற்றியல், ப.396

துணைநூற்பட்டியல்

1.புலியூர்க் கேசிகன் (உ.ஆ), தொல்காப்பியம் எழுத்து - சொல் - பொருள், பாரதி புத்தகாலயம், சென்னை - 600018, முதற் பதிப்பு - 2022.

2.லூர்து தே. நாட்டார் வழக்காற்றியல்: சில அடிப்படைகள், நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், பாளையங்கோட்டை - 627002, முதற் பதிப்பு - 1997.

3.புலியூர்க் கேசிகன் (உ.ஆ), புறநானூறு - முதல் பாகம், கௌரா பதிப்பகம், சென்னை - 600005, முதற் பதிப்பு - 2008.

4.குமரகுருபரன் பிள்ளை (உ.ஆ), திருநாவுக்கரசர் தேவாரம், காசி மடம், திருப்பனந்தாள் - 612504, முதற் பதிப்பு - 1957.

5.இராமநாதன். ஆறு, தமிழர் வழிபாட்டு மரபுகள் (நாட்டுப்புற தெய்வ வழிபாட்டு ஆய்வு), மெய்யப்பன் பதிப்பகம், சென்னை - 600042, முதற் பதிப்பு - 2017.

6.புலியூர்க் கேசிகன் (உ .ஆ), கலித்தொகை, கௌரா பதிப்பகம்,
சென்னை - 600005, முதற் பதிப்பு - 2021